# பரிவுப் பிரகடனம்

சமய ஒழுங்குகள், ஆன்மிக உணர்வுகள், பாரம்பரிய நடைமுறைகள் ஆகிய அனைத்தின் தலையாய இலக்கு நம்மைப் போலவே மற்றவர்களையும் நடத்திட வேண்டும் என்பதுதான்.

பொதுவாக இருந்தாலும் சரி தனிப்பட்ட முறையானாலும் சரி, யாருக்கும் காயம் ஏற்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். சுயநலம், சுயகௌரவம் காரணமாக வன்மப் பேச்சைத் தவிர்ப்பதோடு அனைவருக்கும் சம உரிமை வழங்கி, வெறுப்புணர்வை அகற்ற வேண்டும். எதிரியே ஆனாலும் சரி, மனித உரிமை வழங்கப்பட்டே ஆக வேண்டும்.

இரக்க உணர்வோடு வாழ்வதில் நாம் தோல்வி அடைந்திருக்கிறோம் என்பதையும் சில சமயங்களில் சமயத்தின் பெயரால் மனுக்குலத்தைக் காயப்படுத்தியிருக்கிறோம் என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம்.

ஆகவே, எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதன்வழி நாம் விடுக்கும் வேண்டுகோள்:

- கருணை உணர்வை ஒழுக்கம் மற்றும் சமயங்களின் மையப் புள்ளிக்குக் கொணர வேண்டும்.

- வன்முறை, வெறுப்புணர்ச்சி, இழிவுபடுத்தல் அனைத்தும் சட்டத்துக்குப் புறம்பானவை எனக்கூறும் பழைய கோட்பாடுகளை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும்.

- இளையோருக்கு மற்ற பாரம்பரியம், சமயக் கலாச்சாரம் பற்றித் தெளிவோடும் மதிப்போடும் தகவலளிக்க வேண்டும்.

- பண்பாட்டு-சமயப் பல்நோக்குப் பார்வையை ஆக்ககரமாகப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும்.

- எதிரிகளே ஆனாலும் மனுக்குலத் துயரங்களைப் பற்றிய துல்லிதமான தகவல்களைத் தர வேண்டும்.

ஒரு குடும்பம் போல் இருக்கும் இன்றைய உலகுக்கு மனித உணர்வும் பிரகாசமும் ஆற்றலும் உடனடியாகத் தேவை. சுயநலக் கோட்பாடே கால்கோள் கொண்டுவிட்ட இந்த உலகில் மனித உணர்வு மட்டுமே அரசியல், சித்தாந்தக் கோட்பாடுகளாலும் சமய எல்லைகளாலும் ஏற்பட்டுள்ள பிரிவுகளை தகர்க்க முடியும்.